1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் அன்னை சத்தியா நகர், சூரியா நகர், ஜோதியம்மாள் நகர், சித்திரா நகர், கோட்டூர்புரம், மல்லிப்பூ நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 2,043 குடும்பங்கள் பயன் பெறும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 1,03,20,000 ரூபாய்.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பணிகளை முடிக்க தேவையான நிலங்களைக் கையகப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு கோவில் நிலம், குதிரைப் பந்தய நிறுவனத்திற்குச் சொந்தமான நிலம், காவல் துறையைச் சேர்ந்த நிலம், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த நிலம் போன்ற பல்வேறு துறைகளுக்கு அல்லது நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை அரசு கையகப்படுத்தி, அதற்குப் பின்னால் பணியைத் தொடங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கால நிர்ணயத்தை இப்போது உறுதியாகச் சுட்டிக்காட்ட முடியாது. இருப்பினும் வேகமாக நிலத்தைக் கையகப்படுத்தி, பணிகளை முடிக்க அரசு முயற்சி செய்யும்.

சேலம் மாவட்டம் இடைப்பாடியில் வீட்டு வசதி வாரிய வீடுகள்.

59—(*வினா எண். 8271) திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(அ) இடைப்பாடி கிராமத்தில் தற்பொழுது நில ஆர்ஜிதம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி முடிந்தபின் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்கள் தீட்டப்படும்.

திரு. ச. கோவிந்தசாமி : தலைவரவர்களே, அங்கு நீண்ட நாட்களாக வீட்டு வசதித் துறை வீடு கட்டும் பணியைத் தொடங்காமல் காலதாமதம் செய்கிறது. இந்தப் பணியை எப்போது தொடங்குவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவரவர்களே, பொதுவாக நில ஆர்ஜிதம் செய்கின்றபோது பல்வேறு நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 91 ஏக்கர் நிலம் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத் தொகை நிர்ணயிக்கிற ஏற்பாடு நடைபெற்று வருகின்றது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய், சுமார் 500 மனைகளுக்கும் 800 குடியிருப்புக்களுக்கும் அந்தப் பகுதியிலே கொடுக்கப்படும்.

(முற்பகல் 9–50)

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதித் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதுபோன்ற உத்தேசம் ஏதும் இல்லை.

குமரி மாவட்டத்தில் குடிசைகளை மாற்றி வீடு கட்டுவதற்கு ஒதுக்கிய தொகை.

60—(*வினா எண். 8985) திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் குடிசைகளை மாற்றி வீடு கட்டிக் கொடுப்பதற்காக இவ்வாண்டில் (1986-87) எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அது பற்றிய விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): குமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவில் நகரம், ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிற 43 நகரங்களில் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த நகரத்தில் வீடுகள் கட்டித் தரப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய திட்டங்களைப் பார்க்கும்போது மீனவர் பகுதிகளிலும், பனை ஏறும் தொழிலாளர்கள் வசிக்கும் குடிசைப் பகுதிகளிலும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற வகையில், அதுவும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.